**செய்தி வெளியீடு எண். 598** **நாள்— 19.07.2010**

# <u>அரசு செய்தி வெளியீடு</u>

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக ரூபாய் 77 இலட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பேருந்து நிலையத்திற்கு பெருந் தலைவர் காமராஜர் அவர்களின் பெயரைச் சூட்டிட வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கையினையேற்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இராதாபுரம் பேருந்து நிலையம் என்று தற்போதுள்ள பெயரை "பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையம்" என்று வைக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்.

காமராஜர் பெயரை இந்தப் பேருந்து நிலையத்திற்கு வைக்க வேண்டு மென்று சத்திய மூர்த்தி பவன் வளாகத்தில் உண்ணா விரதம் இருந்த சுடலைமுத்து மற்றும் சிவாஜி முத்துக்குமார் ஆகியோர்; தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் கொடுத்த புகாரின் பெயரில் கைது செய்யப்பட்டனர். அவர்களை சிறையிலிருந்து உடனடியாக விடுவிக்கவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

* * * * * *

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை—9.